19.03.2025

OS No: 544/2019

வா.சா.1 திரு. பிச்சைமணி, த/பெ. பார்த்தசாரதி

**<u>1, 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன், எழுத படிக்க தெரியுமா என்றால் 5ம் வகுப்பு படித்துளளேன், படிக்கத் தெரியும், எழுத தெரியாது. தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னால் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் நான் அனுப்பிடவில்லை என்றால் சரிதான். எனது பிராதிலோ, சாட்சிய நிருபணவாக்குமூலத்திலோ பிரதிவாதியின் தாயார் மற்றும் தகப்பனார் எப்போது இறந்தார்கள் என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் 1961ம் வருடம் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC.111/1961 வழக்கை 1ம் பிரதிவாதியின் தாயார் இராக்கம்மாள், 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பார்த்தசாரதியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரிவித்துள்ளார் அந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி CC.111/1961 வழக்கு குறித்து நான் ஆட்சேபனை தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். எப்போது ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால் ஞாபகமில்லை. எனது நிருபணவாக்குமூலத்தில் மேற்படி ஆட்சேபனையை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எந்தவித ஆட்சேபனையும் தெரிவித்திடாமல் மேற்படி வழக்கு குறித்து ஆட்சேபனை தெரிவித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கும், பார்த்தசாரதிக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்ற விபரத்தை பிராதிலோ, நிருபணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் எப்போது அவர்களுக்குள் திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது அதனால் அது குறித்து சொல்லவில்லை. பார்த்தசாரதிக்கு வாதிகளாகிய நாங்களும் தான் வாரிசு என்பதைக்காட்டிட வாரிசு

சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் இரண்டு ஆவணங்கள் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கில் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்திடாமல் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பார்த்தசாரதியின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்தால் அதில் வாதிகள் பெயர் மட்டும் தான் இருக்கும் என்றும், 1, 2பிரதிவாதிகளின் பெயரோ, 1, 2 பிரதிவாதிகளின் தாயார் இராக்கம்மாள் பெயர் இருக்காது என்பதால் மேற்படி வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகளுக்கும் அவருடைய தாயாரான இராக்கம்மாளுக்கும், பார்த்தசாரதி செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் 1963ல் உரிமை பாத்தியம் கொடுத்துள்ளார் என சங்கதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1963ம் வருட செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து நாங்கள் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் எத்தனை சொத்துவிபரங்கள் உள்ளது என்றால் 6 இலக்க சொத்துவிபரங்கள் உள்ளன. 6 இலக்க சொத்துக்களுக்கு வில்லங்கச் சான்று எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வில்லங்கச்சான்று தாவா வழக்கில் தாக்கல் செய்திடாமல் தாக்கல் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வில்லங்கச் சான்றிதழில் 1ம் பிரதிவாதி யார், யாருக்கு விற்றார் என்ற விபரம் தெரியுமா என்றால் 3 இலக்கச் சொத்துக்களை விற்றுவிட்டார். யார், யாருக்கு 3 இலக்க சொத்துக்களை 1ம் பிரதிவாதி விற்றார் என்றும், அவர் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். வழக்குரையில் தாவா சொத்துக்கள் அனைத்திலும் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக வாதம் செய்கிறேன் என்றால் 3 இலக்க சொத்தில் மட்டும் தான் கூட்டாக அனுபவம் செய்கிறேன். மீதியுள்ள 3 இலக்க சொத்தில் கூட்டு அனுபவத்தை நிரூபிக்க எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. எனது

வழக்குரையில் வழக்குமூலம் சரியில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல. வாதிகள் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy Digitally signed by R Pandy Date: 2025.03.19 17:21:50 +0530